<u>**சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.**</u>

<u>**அ.வ எண்: 111/2013 ராமமூர்த்தி (வாசா1) தேதி:22.07.2025**</u>

<u>**வாசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் 11 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**</u>

பெரியராமையாதேவர் அவரது வாழ்நாளில் பாகப்பிரிவினை ஆவணமோ உயில்ஆவணமோ எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் எனதுதந்தை செந்தூர் தேவர் பெயரில் வெந்நிலை கிரையஆவணம் எழுதிகொடுத்துள்ளார். எனது கட்சிஎன்பது பெரியராமையாதேவர் என்தந்தை பெயரில் வெந்நிலை கிரையஆவணம் எழுதிகொடுத்துள்ளார் என்பதுதான் ஆகும். அந்த வெந்நிலை கிரையஆவணம் பற்றி எனதுதந்தை என்னிடம் கூறியதன் பெயரில் எனக்கு தெரியும். அந்த வெந்நிலை கிரையஆவணம் பிறப்பித்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் அந்தஆவணம் நான் பிறப்பதற்கு முன்பே ஏற்பட்டது. எங்கள் குடும்பத்தில் 1920 ம்வருடத்திலே பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணம்தான் வாசாஆ.1 என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் பெரியராமையாதேவர் , சின்னராமையாதேவர் என 2 நபர்கள் உண்டு என்றால் சரிதான். வாசாஆ 42 ஆவணம் சின்னராமையாதேவருக்கு உரியதா அல்லது பெரியராமையாதேவருக்கு உரியதா என்ற விவரம் துலங்காது என்றால் அந்தஆவணத்தில் வெ. ராமையாத்தேவர் என்றுமட்டுமே உள்ளது. வாசாஆ.42 அடிப்படையில் அந்தஆவணம் சின்னராமையாதேவருக்கு உரியதா அல்லது பெரியராமையாதேவருக்கு உரியதா என்று பரிசீலணை செய்யமுடியாது என்றால் அந்த ஆவணம் பெரியராமையாதேவருக்கு உரியது ஆகும். வாசாஆ.42 ல் இறந்தநபரின் தந்தைபெயரோ, தாயார் பெயரோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாசாஆ.42 ஆவணம் இந்தவழக்கிற்கு சம்பந்தம் இல்லாதஆவணம் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் பெரியராமையாதேவருக்கு உரியது என நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. பெரியராமையாதேவர் என்தந்தை பெயரில் வெந்நிலைகிரைய ஆவணம் தவிர வேறுஎந்தஆவணமும் எழுதித்தரவில்லை என்பதுதான் எனது கட்சி என்றால் சரிதான். பெரியராமையாதேவர் அவர் வாழ்நாளில் என்தந்தை பெயரில் வெந்நிலைகிரைய ஆவணம்

எழுதிதரவேயில்லை என்றால் சரியல்ல. வழக்குத்தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் நான்தான் விவரம் கூறினேன். தாவாசொத்து சம்பந்தமாக எங்கள் குடும்பத்தில் பதிவு பாகப்பிரிவினை எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல 2001 ம்வருடம் எங்கள் குடும்பத்தில் நானும் என் உடன்பிறந்த நபர்களும் பதிவுசெய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டோம் அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் தாவாசொத்து வருகிறது. 2001 ம்வருடம் பதிவுசெய்யப்படாத பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொண்டதாக கூறுவதும் அந்தஆவணத்தை தாக்கல்செய்துள்ளதாக கூறுவதும் இந்தவழக்கிற்காக நான் கூறும் பொய் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.